# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109756

1. District மாவட்டம் : திருச்சி  PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு  Year ஆண்டு: 2022  FIR No. மு.த.அ. எண்: 9  Date நாள்: 16.8.2022

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988  Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: (As amended in 2018)  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 11.8.22  Date to நாள் வரை :
   Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் : 15.00 Hrs  Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.8.22  Time நேரம் : 08.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.8.22  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் மகளிர் திட்ட அலுவலகம், மணப்பாறை யூனியன் ஆபீஸ். சுமார் 43 கிமீ தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் செ. விஜயலட்சுமி  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செந்தில் குமார்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.7.19[illegible]  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் : விவசாயம்  (g) Address : முகவரி 9/221, காமராஜ் நகர், கொட்டப்பட்டி கிராமம், சென்னிடையான்பட்டி, மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. மல்லிகா, வட்டார இயக்க மேலாளர், மணப்பாறை வட்டார வளர்ச்சி அலுவலகம், மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16.8.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

16.8.2022

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Inspector of Police
SAC
Trichy

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2022–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (16.08.2022) காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், கண்ணுடையான்பட்டி ஊராட்சி, காட்டுப்பட்டி கிராமம், எண்.9/221, காமராஜர் நகரைச் சேர்ந்த செந்தில்குமார் மனைவி திருமதி.செ.விஜயலட்சுமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் செயல்படும் மகளிர் திட்ட அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார இயக்க மேலாளர் திருமதி.மல்லிகா புகார்தாரர் திருமதி.விஜயலட்சுமி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 16.08.2022 காலை 10.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.09/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் செ.விஜயலட்சுமி, க/பெ.செந்தில்குமார், எண்.9/221, காமராஜ் நகர், காட்டுப்பட்டி கிராமம், கண்ணுடையான்பட்டி ஊராட்சி, மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம், பெறுனர் லஞ்ச ஒழிப்புத்துறை இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம். அய்யா, நான் திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம், கண்ணுடையான்பட்டி ஊராட்சி, காட்டுப்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். எங்கள் ஊரில் 12 மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வரும் ரோஜா மகளிர் சுய உதவி குழுவிற்கு கடந்த 4 வருடங்களாக தலைவியாக நான் இருந்து வருகிறேன். கடந்த 18.3.2022 அன்று திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் தாட்கோ மூலம் கடன் வழங்க எங்களுக்கான நேர்காணல் நடத்தப்பட்டது. அதில் எங்கள் குழு சார்பாக நான் கலந்து கொண்டேன். அதன்பேரில் எங்களது குழுவிற்கு தாட்கோ மூலமாக வங்கிக்கடன் வழங்க அனுமதி வழங்கினார்கள். அதன்பிறகு எங்கள் ஊரில் நடைபெற்ற ரோஜா மகளிர் சுய உதவிக்குழு கூட்டத்தில் எங்கள் சுய உதவி குழுவிற்கு தாட்கோ மூலமாக வங்கிக்கடன் பெற சுய உதவிக்குழு பெயரில் விண்ணப்பம் கொடுத்து கையொப்பம் பெறப்பட்டது. பின்பு அந்த விண்ணப்பத்தை மணப்பாறை இந்தியன் வங்கியில் ஒப்படைத்தோம். வங்கியில் எங்களது விண்ணப்பம் ஏற்கப்பட்டு எங்கள் குழுவிற்கு 5 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டும் அதில் இரண்டரை லட்ச ரூபாய் மானியமும் எனவும் தெரிவிக்கப்பட்டது. எங்கள் குழுவிற்கு தாட்கோ மூலம் கறவை மாடு வாங்க ரூபாய் 2½ லட்சம் மானியத்துடன் அனுமதிக்கப்பட்ட ரூ.5 லட்சம் வங்கிக்கடனுக்கு ஏற்பாடு செய்ய

மணப்பாறை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் செயல்படும் மகளிர் திட்ட அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார இயக்க மேலாளர் மல்லிகா என்பவரை கடந்த **11.8.2022** அன்று மதியம் சுமார் **3** மணியளவில் அந்த அலுவலகத்தில் சந்தித்து கேட்டபோது, மல்லிகா, உங்களுக்கு இந்தியன் வங்கியில் அனுமதிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய கடன் தொகை கிடைக்க வேண்டுமென்றால் எனக்கு பனிரெண்டாயிரம் வேண்டும் என்று கேட்டார். நான் இந்த பணம் எதற்கு மேடம் என்று கேட்டேன். அதற்கு மல்லிகா, உங்க குழுவிற்கு இரண்டரை லட்சம் மானியம் கிடைக்கிறது, அதனால் எனக்கு பனிரெண்டாயிரம் ரூபாய் தனியாக கொடுத்தால்தான், உங்களுக்கு இந்தக்கடன் தொகையை கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறினார். இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம், சரிங்க மேடம் பணம் ரெடி பண்ணிட்டு பணத்தோடு வந்து உங்களை சந்திக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட வட்டார இயக்க மேலாளர் மல்லிகா மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (S.விஜயலட்சுமி) 16.8.2022. Sir, Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Tiruchirappalli. Received the report at 08.00 hrs on 16.08.2022 and made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.09/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 10.30 hrs on 16.08.2022. Sd.xxx (G.SAKTHIVEL) 16.8.2022 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Trichy.

G. [signature]
16.8.2022
[G. SAKTHIVEL]
Inspector of Police
V & AC
Trichy